நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

**சி.சி.எண். 200/2020**

**2022ம் ஆண்டு ஜூலை மாதம் 13ம்** நாள் புதன்கிழமை குற்றமுறையிடுபவர் தரப்பு சாட்சியாகிய **கு.மு.சா.1வது** நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர | சோழராஜன் | வயது: | 39 |
| த/பெ.(அ)க.பெ | ராதாகிருஷ்ணன் | தொழில்: | வனசரக அலுவலர் |
| ஊர் : | ஜோலார்பேட்டை | சமயம்: | இந்து |
| வட்டம் : | திருப்பத்தூர் | சாதி: | |
| மாவட்டம : | திருப்பத்தூர் | | |

முதல் விசாரணை:

நான் தற்போது வேலூா ்வன பொறியியல் சரகத்தில் வனசரக அலுவலராக பணி புரிந்து வருகிறேன். நான் சிங்காரபேட்டை வனசரக அலுவலகத்தில் வனசரக அலுவலராக பணிபுரிந்த போது, கடந்த 27.08.2019 அன்று வனவர் சங்கர் தலைமையில் டி.கே.பத்மநாபன், வனக்காப்பாளர், கலியபெருமாள் வனக்காப்பாளர், கணபதி வனக்காவலர் அவர்கள் இன்னர் ஜவ்வாது காப்புக்காட்டில் நடுகுப்பம் முதல் பெருமாள் கோவில் சரகம் வரை ரோந்து பணி மேற்கொண்ட போது, சுமார் மதியம் 02.00 மணியளவில் காப்புக்காட்டுக்குள் பேச்சு சத்தம் கேட்டது. அதனை தொடர்ந்து காப்புக்காட்டில் அடையாளம் தெரியாத இருந்த இரண்டு நபர்கள் கையில் வைத்திருந்த நாட்டுதுப்பாக்கியை அங்கேயே போட்டுவிட்டு ஓடினார்.நாங்கள் பின் தொடர்ந்து பிடிக்க முயன்றும் பிடிக்க இயலவில்லை. கீழே கிடந்த இரண்டு நாட்டு துப்பாக்கிகளை கைப்பற்றி வனக்காவலர் கலியபெருமாள் அவர்களால் எண். 1 மற்றும் எண். 2 என்று சிவப்பு பெயிண்டால் வரிசை எண் கொடுக்கப்பட்டு, மேற்படி துப்பாக்கியின் விபரங்கள் வனக்காப்பாளர் டி.பத்மநாபன் அவர்களால் எச் நமூனா தயார் செய்யப்பட்டது. ஏச் நமூனா எண். 045532 ஆகும். பின்னர் சம்பவ இடத்தில் மகஜர் நமூனா வனவர் சங்கர் என்பவரால் தயார் செய்யப்பட்டது. மகஜர் நமூனாவில் வனபணியாளர்கள் கையெழுத்து செய்தனர். பின்னர் கைப்பற்றப்பட்ட இரண்டு துப்பாக்கிகளையும் எடுத்துக்கொண்டு சிங்காரபேட்டை வனசரக அலுவலகத்திற்கு வந்து வனவிலங்கு குற்ற எண். 06/2019 வழக்கு வன உரிமை பாதுகாப்பு சட்டம் பிரிவு 9, 39, 50 மற்றும் 51 -ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. பின்னர் சம்பவ இடத்தில் தோரய

வரைப்படத்தை சங்கர் வனவர் அவர்களால் தயார் செய்யப்பட்டது. சொத்து விபர பட்டியல் வனக்காப்பாளர் பத்மநாபன் அவர்களால் தயார் செய்யப்பட்டது. துப்பாக்கியின் மீது சிவப்பு நிற பெயிண்டால் வனவிலங்கு குற்ற எண். டபிள்யு. ஓ ஆர்.எண். 06/2019, வனக்காவலர் கலியபெருமாள் அவர்களால் எழுதப்பட்டது. பின்னர் ரோந்து சென்ற வன பணியாளர்கள் சம்பவ இடத்திலிருந்து தப்பி ஓடிய இரண்டு எதிரிகள் ஒருவர் மட்டும் சம்பவ இடத்திலேயே அடையாளம் கண்டு அவர் பெயர் காமராஜ் த/பெ. லட்சுமணன் என்றும் தெரியவந்தது. அவர்தான் இவ்வழக்கின் 1ம்எதிரி. 1ம் மற்றும் 2து எதிரிகளை தேடி வந்த நிலையில், எதிரி காமராஜ் முன்பிணையில் சென்றுவிட்டதால் அவரை கைது செய்யவில்லை.தப்பி ஓடிய மற்றொரு எதிரியை பற்றி தொடர்ந்து புலன் விசாரணை செய்தும் அவர் பற்றிய எந்தவிபரமும் கிடைக்கப்பெறவில்லை. எனவே 1ம் எதிரி மீது இவ்வழக்கின் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன்.மேற்படி என்னுடைய இறுதி அறிக்கையுடன் பின்வரும் ஆவணங்களையும் சான்று பொருட்களையும் தாக்கல் செய்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் இரண்டு நாட்டுதுப்பாக்கிகள் மேற்படி சம்பவத்தின் போது நாங்கள் கைப்பற்றியது தான் அவை சா.பொ.1 மற்றும் சா.பொ.2 ஆகும். எச் நமூனா பு.த.சா.1 ஆகும். மகஜர் நமூனா பு.த.சா.2 ஆகும். சொத்து விபர பட்டியல் பு.த.சா.ஆ.3 ஆகும். சம்பவ இடத்தின் தோரய வரைப்படம் பு.த.சா.ஆ. 4 ஆகும். சம்பவ இடத்தின் பீட் மேப் பு.த.சா.ஆ. 5 ஆகும். 16 சான்றிதழ் பு.த.சா.ஆ.6 ஆகும்.எனவே மேற்படி சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்து எதிரி மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

**சி.சி.எண். 200/2020**

**2022ம் ஆண்டு ஜூலை மாதம் 13ம்** நாள் புதன்கிழமை குற்றமுறையிடுபவர் தரப்பு சாட்சியாகிய **கு.மு.சா.2வ**து நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர | சங்கர் | வயது: | 59 |
| த/பெ.(அ)க.பெ | கண்ணன் | தொழில்: | வனவர் |
| ஊர் : | திருவண்ணாமலை | சமயம்: | இந்து |
| வட்டம் : | திருப்பத்தூர் | சாதி: | |
| மாவட்டம : | திருப்பத்தூர் | | |

முதல் விசாரணை:

நான் தற்போது திருவண்ணாமலை தானிப்பாடி சரகத்தில் வனவராக பணிபுரிந்துவருகிறேன். நான் சிங்காரபேட்டை வனசரக அலுவலகத்தில் வனவராக பணிபுரிந்த போது, கடந்த 27.08.2019 அன்று என்னுடைய தலைமையில் டி.கே.பத்மநாபன், வனக்காப்பாளர், கலியபெருமாள் வனக்காப்பாளர், கணபதி வனக்காவலர் அவர்கள் இன்னர் ஜவ்வாது காப்புக்காட்டில் நடுகுப்பம் முதல் பெருமாள் கோவில் சரகம் வரை ரோந்து பணி மேற்கொண்ட போது, சுமார் மதியம் 02.00 மணியளவில் காப்புக்காட்டுக்குள் பேச்சு சத்தம் கேட்டது. அதனை தொடர்ந்து காப்புக்காட்டில் இருந்த நபர்களில் ஒருவர் காமராஜ் என அடையாளம் தெரிந்தது. மற்றொரு நபர் அடையாள ம் தெரியவில்லை. மேற்கண்ட இரண்டு நபர்களும் கையில் வைத்திருந்த நாட்டுதுப்பாக்கியை அங்கேயே போட்டுவிட்டு ஓடினார்.நாங்கள் பின் தொடர்ந்து பிடிக்க முயன்றும் பிடிக்க இயலவில்லை. கீழே கிடந்த இரண்டு நாட்டு துப்பாக்கிகளை கைப்பற்றி வனக்காவலர் கலியபெருமாள் அவர்களால் எண். 1 மற்றும் எண். 2 என்று சிவப்பு பெயிண்டால் வரிசை எண் கொடுக்கப்பட்டு, மேற்படி துப்பாக்கியின் விபரங்கள் வனக்காப்பாளர் டி.பத்மநாபன் அவர்களால் எச் நமூனா தயார் செய்யப்பட்டது. ஏச் நமூனா எண். 045532 ஆகும். பின்னர் சம்பவ இடத்தில் மகஜர் நமூனா என்னால் தயார் செய்யப்பட்டது. மகஜர் நமூனாவில் வனபணியாளர்கள் கையெழுத்து செய்தனர். பின்னர் கைப்பற்றப்பட்ட இரண்டு துப்பாக்கிகளையும் எடுத்துக்கொண்டு சிங்காரபேட்டை வனசரக அலுவலகத்திற்கு வந்து வனவிலங்கு குற்ற எண். 06/2019 வழக்கு வன உரிமை பாதுகாப்பு சட்டம் பிரிவு 9, 39, 50 மற்றும் 51 -ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. பின்னர்

சம்பவ இடத்தில் தோரய வரைப்படத்தை நான் வரைந்தேன். சொத்து விபர பட்டியல் வனக்காப்பாளர் பத்மநாபன் அவர்களால் தயார் செய்யப்பட்டது. துப்பாக்கியின் மீது சிவப்பு நிற பெயிண்டால் வனவிலங்கு குற்ற எண். டபிள்யு. ஓ ஆர்.எண். 06/2019, வனக்காவலர் கலியபெருமாள் அவர்களால் எழுதப்பட்டது. சம்பவ இடத்தில் அடையாளம் காணப்பட்ட லட்சுமணன் மகன் காமராஜ் தான் இவ்வழக்கின் எதிரி.அவர் தான் இவ்வழக்கின் 1ம்எதிரி. 1ம் மற்றும் 2து எதிரிகளை தேடி வந்த நிலையில், எதிரி காமராஜ் முன்பிணையில் சென்றுவிட்டதால் அவரை கைது செய்யவில்லை.தப்பி ஓடிய மற்றொரு எதிரியை பற்றி தொடர்ந்து புலன் விசாரணை செய்தும் அவர் பற்றிய எந்தவிபரமும் கிடைக்கப்பெறவில்லை. எனவே 1ம் எதிரி மீது இவ்வழக்கின் அவர் வனவிலங்கு குற்றம் செய்துள்ளதால் வனசரக அலுவலரால் அவர் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.